www.StudyGuideIndia.com

Mat - May - 2011

**7401**

Register Number | | | | | |

# தமிழ் — முதல் தாள்

## ( செய்யுள், உரைநடை )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் III க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஏழனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. 7 × 2 = 14

1. எவ்விரண்டில் எல்லா அறங்களும் உள்ளன ?
2. ஆக்கம் யாரிடம் வழி கேட்டுச் சென்றடையும் ?
3. யாரை வருத்தலாகாது ?
4. இராமனது சினத்தின் தன்மை எத்தகையது ?
5. சிலப்பதிகாரம் - பெயர்க்காரணத்தை எழுதுக.
6. பூவை நிலைத்துறை விளக்குக.
7. திரிகூட மலையில் விளைவன யாவை ?
8. மேற்கு வானில் மையிருட்டுக் கைநீட்டும் போது நிகழ்வன யாவை ?
9. புத்தர் எதை மொழிந்தார் ? எதற்கு உழந்தார் ?

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக. 5 × 4 = 20

10. திரு. வி. க. குறிப்பு வரைக.
11. புகழுடையார் எய்தும் மேன்மையை விளக்குக.
12. செல்வத்தை அழிக்கும் படைகள் யாவை ?
13. கிருட்டினப் பிள்ளை ஏசுநாதரின் சிலுவைப்பாடு பற்றி வருந்திக் கூறியவை யாவை ?
14. 'சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு' - உவமையை விளக்கிப் பொருளொடு பொருத்துக.?
15. தாயுள்ளத்தின் இயல்புகள் யாவை ?
16. அருக தேவனைச் சமண முனிவர் எங்ஙனம் புகழ்ந்துள்ளார் ?

[ Turn over

III. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக :

17. 'தன்னரிய' ..... எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடலை அடிமாறாமல் எழுது. 4

18. 'பரியது' ..... எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக. 2

19. 'நன்று' என முடியும் குறட்பாவை எழுதுக. 2

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக : $1 \times 8 = 8$

20. இடனறிதல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

21. அனுமன் அறநெறிகளை உணர்ந்தவன் என்பதைக் கம்பராமாயணம் கொண்டு விளக்குக.

22. 'விண்மீன் கூட்டம்' என்னும் தலைப்பில் வாணிதாசன் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக.

V. 23. பொருத்துக : $4 \times 1 = 4$

| *சொல்* | | *பொருள்* |
|---|---|---|
| அ) பொதும்பர் | — | இரவு |
| ஆ) புயம் | — | சினம் |
| இ) முனிவு | — | சோலை |
| ஈ) அல் | — | வீடு |
| | — | தோள். |

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க :** $6 \times 1 = 6$

24. நெஞ்சை அள்ளுஞ் சிலப்பதிகாரம் என்று பாடியவர் .................. .

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி.

25. கம்பரைப் புரந்த வள்ளல் .................. .

அ) குமணவள்ளல் ஆ) சடையப்ப வள்ளல் இ) பாரிவள்ளல்.

26. இரட்சணிய யாத்திரிகத்திலுள்ள பருவங்கள் .................. .

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து.

27. சிற்றிலக்கிய வகை .................. .

அ) அறுபத்தி நான்கு ஆ) தொண்ணூற்றாறு இ) எண்பத்தாறு.

28. தமிழ்வேந்தர் வெளியிட்ட சின்னக்காசு .................. .

அ) நிலவு ஆ) விண்மீன் இ) செங்கதிரோன்.

29. பிறர் நம்மை விரும்பி மேன்மைப்படுத்துமிடத்து .................. .

அ) மகிழ்ச்சியடைய வேண்டும்

ஆ) பரிசளிக்க வேண்டும்

இ) நாணுதல் வேண்டும்.

www.StudyGuideIndia.com

VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. 5 × 2 = 10

30. கட்டாயப் படிப்பு பற்றித் திரு. வி. க. யாது கூறுகிறார் ?

31. ஒரு துறைக் கோவை - விளக்குக.

32. உள்வளத் திறமை என்பது என்ன ?

33. ஒவ்வொரு கூட்டத்திலும் வ. உ. சி எடுத்துரைக்கும் திருக்குறள் யாது ?

34. கள்ளுக்கடை மறியலில் முதன்முதலாக ஈடுபட்ட பெண்மணிகள் யாவர் ?

35. பொருள்களின் மூன்று உருவ நிலைகள் யாவை ?

36. சீறாப்புராணம் எங்கு, எவர் உதவியால் அரங்கேற்றப்பட்டது ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** ஒவ்வொன்றிற்கும் *ஆறு* வரிகளில் விடை எழுதுக. 4 × 4 = 16

37. அப்துல் கலாம் நம் மக்களை எவ்வாறு மூவகைப் படுத்துகிறார் ?

38. வண்ணம் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

39. கதர்த் திட்டத்தில் பெரியாருடைய பங்கினை எழுதுக.

40. உமறுப்புலவரின் நன்றி மறவாப் பண்பினை விளக்குக.

41. இல்வாழ்க்கை எப்படி வளரவேண்டும் என மு. வ. வாழ்த்துகிறார் ?

42. நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு விளக்குக.

VIII. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக. 1 × 8 = 8

43. அமிர்த கவிராயரின் ஒருதுறைக்கோவை அரங்கேற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதுக.

44. பெரியாரின் மதுவிலக்குத் தொண்டு பற்றித் தொகுத்து எழுதுக.

45. புல்லர்களை ஒளவையார் புகழ்ந்து பாடாமைக்குரிய காரணத்தை விளக்குக.

[ Turn over

www.StudyGuideIndia.com

IX. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : 4 × 1 = 4

46. 2010-ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே இந்தியாவிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியது .................. .

அ) கல்லாமை

ஆ) வறுமை

இ) வேலையில்லாத் திண்டாட்டம்.

47. நட்புக்குக் கரும்பை உவமையாகச் சொன்ன இலக்கியம் .................. .

அ) திரிகடுகம்

ஆ) பழமொழி

இ) நாலடியார்.

48. எட்டப்ப மன்னரின் சபையில் தலைமைத் தமிழ்ப் புலவராய் இருந்தவர் .................. .

அ) சேகுமுதலியார்

ஆ) வாலை வாரிதி

இ) கடிகை முத்துப் பிள்ளை.

49. காந்தியார் காட்டிய .................. போராட்டத்தைப் பெரியார் விழிப்பாகக் கடைப்பிடித்தார்.

அ) ஒத்துழையாமை

ஆ) உப்புக் காய்ச்சுதல்

இ) அந்நியப் பொருள் புறக்கணிப்பு.

X. கீழ்க்காணும் சொற்களுள் எவையேனும் இரண்டினை மட்டும் வாக்கியத்தில் அமைத்து எழுதுக. 2 × 1 = 2

50. அ) தன்னிறைவு

ஆ) நாளடைவில்

இ) நேர் மாறாக.

www.StudyGuideIndia.com